கொப்பியும் கும்மியும்

ஓர் ஒப்பீடு

ஆய்வுக் கட்டுரை



கண்ணப்பன்

மேனாள் நபார்டு து.பொ.மே

Cover : Nageshwar - Cheriyal (AP)

அறிமுகம் :



கும்மி, கோலாட்டம் என்பதெல்லாம் தமிழ்நாட்டுச் சிறுமியர் மற்றும் மகளிருக்கான நிகழ்த்து கலையாகும். அவை, ஆன்மிகம், பண்பாடு, பொழுதுபோக்கு போன்றவற்றுடன் தொடர்புடைய பொதுவான கலையாகும். தெற்கிலும், வட நாட்லும் இது போன்று பெண்கள் ஆடும் ஆட்டம் உண்டு. பெயர்களும், ஆடும் விதமும் சற்று மாறுபட்டிருக்கும்.

தமிழ்நாட்டு கிராமப் பகுதிகளில் வெவ்வேறு மாதங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக கும்மி கொட்டினாலும், ‘கும்மி கொட்டுவதற்கே ஒரு நாள் உண்டென்றால் அது தைத் திங்கள் மூன்றாம் நாள்தான்’ என்பார் கே. கருணாநிதி. மேலும், அதனை கரிநாள், காணும் பொங்கல் மற்றும் கன்னிப் பொங்கல் என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

கும்மி என்பதானது கொம்மை என்ற பழமையான பெயர்ச் சொல்லாலும், கும்மு என்கிற வினைச் சொல்லாலும் சுட்டப்படுவதாகும். ‘கும்’ என்பதை மொழியியலாளர் குவி, திறள் என்பர். குவி = குவிதல் என்பதற்கு குனிதல், கூடுதல் என இருவேறு பொருளுண்டு.

அதற்கு மாறாக, ‘கும்’ என்பதற்கு தட்டுதல், கையைக் கும்முதலின் காரணமாக இது கும்மி என்ற பெயராயிற்று என்று தனது புத்தகத்தில் (தமிழிசையும், இசைத் தமிழும்), அரிமளம் சு.பத்மநாபன், குறிப்பிடுவது ஏற்புடையதே. இதனையும் சேர்த்து, ‘கையைத் தட்டி, குனிந்து-நிமிர்ந்து, பெண்கள் குழுவாக சேர்ந்து ஆடுவது கும்மியாட்டம்’ எனக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் கும்மி என்ற சொல் இல்லை என்பதே ஆய்வாளர்களின் முடிவு. ‘பிற்கால இலக்கியங்களில்தான் கொம்மி, கொம்மை என்ற சொற்கள் பழகிவருகின்றன’ என ‘நாட்டுப்புறவியல்’ என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளார் முனைவர் விஜய லெட்சுமி ராமசாமி.



சங்கம் மருவிய காலத்திலும் ‘கும்மி’ என்ற சொல் இல்லையென்றாலும் அதை ஒட்டிய சொற்கள் பொதுவாக, ‘திணை’ சாந்த கலைகள், குறிப்பாக குறிஞ்சி திணைப்பகுதியில் குரவை, கானல்வரி என்ற பெயர்களில் நிகழ்த்தப்பட்டதற்கான குறிப்புகள் உண்டு. கும்மிக்கும் குரவைக்கும் உள்ள சிறு வேற்றுமை ‘கும்மி ஆட்டத்தில், கைகளைக் கொட்டி ஆடுவர் - குரவை ஆடுவோர் கைகளைக் கோர்த்து ஆடுவர்’ என்பது அத்துறை வல்லுநர்களின் கூற்று. இவை போன்ற இருவகை ஆட்டங்களும், சடங்குகளும், பாணியும், திண்டுக்கல் மாவட்ட ராஜகம்பளத்தார் பெண்களிடையே இன்றும் உயிர்ப்புடன் உள்ளது.

கொப்பி கொட்டுதல் :

கொப்பி கொட்டுதல் என்பது செட்டிநாட்டுச் சிறுமியர், கன்னிப் பெண்கள் இடையே உள்ள ஒரு கலாச்சார நிகழ்வாகும். அது பொங்கலுக்கு மறுநாள் நிகழ்த்தப்படும் ஒரு வகை கும்மியாட்டமாகும்.



"கும்மியடித்தல் போன்ற சொல்லே கொப்பி கொட்டுதலும் எனலாம். திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணியில் 'குடங்கையாற் கொம்மை கொட்டுவ போன்று' என்று உள்ளங்கையால் கொட்டுதலைக் குறிப்பிடுகிறார். கொம்மை கொட்டுதல், கொப்பி கொட்டுதல், கும்மி கொட்டுதல் என்ற தொடர்கள் ஒன்றினொன்று இயைபுடையவாதல் காணலாம்" என்பார் தமிழண்ணல்.

'கொப்பி' என்ற சொல் தமிழா? வேற்று மொழிச் சொல்லா? முனைவர். ஒ.முத்தையா (காந்திகிராம் நி.நி.பல்கலை) அவர்களுடன் இணைந்து நடத்திய களப்பணியில்; திண்டுக்கல் பகுதி ராஜ கம்பளத்தார் பெண்டிரின் கொப்பியாலு, கும்முலு வகை கும்மியாட்டத்திலிருந்தும் அது தெலுங்கு என்று அறிய முடிந்தது "ஆந்திராவில் இது 'கொப்பி' என்று வழங்கப் படுகிறது" என்கிறார் முனைவர் கு. சேதுராமன். முனைவர். ராமராசு எழுதிய "ஆந்திர நாட்டுப்புறவியல்" என்ற ஆங்கிலப் புத்தகத்தில் 'கொப்பி ஆட்டம்' (GOBBI DANCE) என்ற தலைப்பில், "கொப்பியாட்டம் ஆந்திர கடற்கரைப் பகுதிகளில் பொங்கல் சமயத்தில் நிகழ்த்தப்படுவதாகும். சுத்தம் செய்யப்பட்ட வீடுகளில் கோலமிடப்படும், அதன் நடுவில் 'கொப்பில்லு' எனப்படும் சாண உருண்டைகளை வைத்து, மலர்கள், குங்குமம் இட்டு வணங்கி, அதனைச் சுற்றி, பாடி, கும்மியடிப்பர்" என்ற குறிப்பு உள்ளது.

இச்சடங்கு, தமிழண்ணல் விவரிக்கும் கொப்பி கொட்டுதல் சடங்குடன் ஓரளவு ஒத்துப் போவதாக உள்ளது. அதன்படி தை மாதம் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலன்று, சாமிக்கு படைக்கும் பொழுது, "கொப்பிக்கு ஒரு பொங்கல்" என எடுத்து வைப்பர். சாணிப் பிள்ளையார், ஒரு தேங்காய் மூடி, சிறு கரும்புத் துண்டு, வெற்றிலைப் பாக்கு, மஞ்சள் போல்வன வைப்பர். மறு நாள் காலையில் இவற்றைக் கூடையில் வைத்து எடுத்துச் சென்று, பிள்ளையார் கோயிலுக்கு எதிரேயுள்ள குளக்கரையில் வைத்து விட்டுக் கூடிநின்று கொப்பி கொட்டுவர். இறுதியில் படையலை தண்ணீரில் விட்டுவிட்டு வீடு திரும்புவர். சமையும் முன் (பூப்படையும் முன்) கன்னி மகளிராயுள்ள பெண்களே கொப்பி கொட்டச் செல்லுவார்கள்.



இதற்குப் பின் 23 ஆண்டுகள் கழித்து 1998இல் எழுதப்பட்ட "நகரத்தார் கலைக்களஞ்சியத்திலும்," 2012இல் அரு. சுந்தரம் எழுதிய 'நகரத்தார் மரபிலும்' கொப்பி பற்றிய குறிப்புகளில் பிள்ளையார் கோயிலுக்குப் பதிலாக சிவன் கோயிலுக்கு முன்னே என்றும்; கொப்பி பொட்டல் பற்றியோ கொப்பிப் பொருட்களைக் குளத்தில் விடுவது பற்றியோ ஒன்றும் கூறப்படவில்லை. அதற்கு முக்கிய காரணமாக ஒன்றைச் சுட்டிக் காட்டலாம் எனில் அது கொப்பிக் கூடையை பித்தளை, வெள்ளியில் செய்யத் துவங்கிய பின்னரும்; அதற்குள் வைக்கப்படும் படையல் பொருட்களையும் வெள்ளியில் செய்யத் துவங்கிய காரணத்தால் அவற்றை நீரில் விடாது திரும்ப எடுத்துச் சென்றிருக்கலாம். இதுபற்றி முனைவர். நா. வள்ளியுடனான நேர்காணலில் கேட்டறிந்ததாவது, "சிறு பிள்ளையார், தேங்காய் மூடி, கரும்பு, பனங்கிழங்கு என தனித்தனியாக, கெட்டி உருப்படியாக, வெள்ளியில் செய்து, ஒரு வெள்ளிக் கொட்டானில் (டப்பாவில்), போட்டு வைத்திருந்த கொப்பிக் கொட்டானைப் பார்த்திருக்கிறேன்" என்பதாகும்.



1974ஆம் ஆண்டு, அதாவது நாற்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன் முனைவர் நா. வள்ளி அவர்களுக்கு திருமணம் நடந்தபோது, அவரது தாயார் தந்த சீதனப் பொருட்களுள் ஒன்று கொப்பிக் கூடையாகும். அக் கூடையில் வைக்கப்பட்டிருந்த, வெள்ளியிலான சிறு சிறு உருப்படிகள் 1) சிறு பிள்ளையார் 2) சூரியன் 3) சந்திரன் 4)தேங்காய்மூடி, 5) வெற்றிலை 6) கரும்புத்துண்டு, 7) வள்ளிக்கிழங்கு, 8) பனங்கிழங்கு மற்றும் 9) வாழைப் பழம் போன்றவையாகும்.

கொப்பிப் பொட்டலும் குடிவண்ணாரும்

'பொதுவாக சிவன் கோவிலுக்கு எதிரிலுள்ள பரந்த வெளியே கொப்பிப் பொட்டலாகும்' என்னும் நகரத்தார் கலைக் களஞ்சியம் பதிவை வழிமொழிவது போலவே திருமதி. கே.வி. ஏ.எல். வள்ளி ஆச்சி (கோட்டையூர் கொலு ஆச்சி) கூறியதாவது, "கோட்டையூர் சிவன் கோவில் அருகே குடிவண்ணார் 'மாத்து' விரித்து வைத்திருப்பார்கள். நகாரத்தார் பெண்கள் பொங்கலன்று விளக்குச் சட்டியில் வைத்த பொருட்களை மாத்தில் சேர்த்துவிட்டு, கூடி நின்று கொப்பிப் பாட்டு பாடி, கும்மியடிப்பார்கள்" அவர் குறிப்பிட்ட 'மாத்து' என்பது குடும்ப சலவைத் தொழிலாளி விரித்து வைத்திருக்கும் துணியைக் குறிப்பதாகும்.

இந்த 'வண்ணார் - மாத்து' பற்றிய நாட்டார் வழக்காறுகளில் முளைப்பாரி பற்றி மூத்த நாட்டாரியல் ஆய்வாளர் சிவ சுப்பிரமணியனின் புத்தகத்தில் 'முளைக் கும்மியாக' கும்மியடித்து, விருதுநகர் பக்கத்தில், பாடும் அறிவிப்பு பாடலில்

வண்ணானைத் தானழைத்து
வகையுடனே சேதி சொல்லி

என்று அறிவிக்கப்படுவதாக குறிப்புண்டு. ‘முளைப்பாரி பிரிவு’ தலைப்பில் வரும் பாடலில் ‘மாத்து’ பற்றிய தரவு

‘வண்ணார் மாத்து தானே
வகைவழிஞ்சால் வருவேன்’ என்பதாகும்.

ஆச்சிமார்களின் கொப்பிப் பாட்டில் வரும் குடிவண்ணார் கொண்டுவந்து விரிக்கும் ‘மாத்து’ துணியும் இந்த ‘முளைப்பாரி கும்மி’ பாட்டில் வருவது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

கொப்பிப் பாட்டு

கொப்பிப் பாடல் பற்றி பலரிடம் கேட்டுப் பார்த்துவிட்டேன். பதில் : “மறந்து போச்சு அப்பச்சி”. ஒரு முறை பேராசிரியர் தெ.சொக்கலிங்கம் அவர்களிடமும் இதையே கேட்டேன். ஒரு வரிதான் ஞாபகம் இருக்கிறது என்று சொன்னதாவது -

“கொப்பினா கொப்பி கோடாலி கொப்பி”.

கடைசியில், ‘பூச்சரம்’ 2016 தைமாத இதழில் ஒரு எட்டு வரிகளை திரு. இராம.நாக. சொக்கலிங்கம், ஆச்சிகள் சொன்னதாக குறிப்பிட்டுள்ளதாவது -

கோணாமே குணங்காமே வெச்சேனே கொப்பி
குளத்தங் கரையோரம் போறாயே கொப்பி
அலுங்காம குலுங்காம வெச்சேனே கொப்பி
ஆத்தங்கரை தேடி போறாயே கொப்பி
வாடாம வதங்காம வெச்சேனே கொப்பி
வைகைக் கரையோரம் போறாயே கொப்பி
ஊரெல்லாம் சுவடி வெச்சேனே கொப்பி
ஊருணிக் கரையோரம் போறாயே கொப்பி

கொப்பி கொட்டுகிறவர்கள் யார்?



செட்டியலீட்டு இளம் பெண்கள் தைப் பொங்கல் சமயத்தில் கொப்பி கொட்டுவது போலவே புதுக்கோட்டைப் பகுதிகளிலும் நகரத்தார் அல்லாத பெண்களும் கொப்பி கொட்டுகின்றனர். இவர்கள் வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், வெவ்வேறு வயதினராகவும் இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். புதுக்கோட்டை மாவட்ட பனையூர் போன்ற பகுதிகளில் கொப்பி என்ற பெயரிலேயே கொப்பி கொட்டுவதாகக் கூறுகிறார் கல்வெட்டு ஆய்வாளர் கரு.ராஜேந்திரன். அவர்கள் வேளாளர் என்றழைக்கப்படும் குயவர் வீட்டுப் பெண்கள் ஆவர். அதே போல் திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்த ராஜகம்பளத்து பெண்களும் (எல்லா வயதினரும்) கொப்பி கொட்டுவதில் கலந்து கொள்கின்றனர்.

காரைக்குடி அருகாமையிலுள்ள அரியக்குடி போன்ற ஊர்களில் வல்லம்பர்கள் வீட்டுப் பெண்களும், ஆசாரிகள் வீட்டுப் பெண்களும் கொப்பி கொட்டியிருக்கின்றனர் என்று நினைவுகூறும் திரு.ஆறுமுகம் (அரியக்குடி கைவினைஞர்) அதில் கன்னிப் பெண்கள் முதல் கல்யாணம் ஆனவர்வரை எல்லோரும் கலந்து கொண்டதாகவும் கூறுகிறார்.

கொப்பியும் கலியாணமும்

கும்மியடிப்பது பல்வேறு காலங்களில் சூழலில் இருந்தாலும், காரணங்களும் பலதரத்ததாகும். செட்டிநாட்டில், கொப்பி கொட்டுவது கலியாணம் ஆகாத கன்னிப் பெண்டிரே என்பதற்கு பற்பல சான்றுகளை ‘பிறை தொழும் பெண்டிர்’ என்ற புத்தகத்தில் தந்துள்ளார் தமிழண்ணல். மார்கழி, தை, மாசி போன்ற மாதங்களில், அப்பெண்கள் பல நோன்புகள் நோற்பர் என்றும் அதன் பயனாக சிறந்த கணவரைப் பெறுதல் என்ற நம்பிக்கையையுமே இதனால் அறியலாம். இவ்வாறு கன்னியர்க்கு உரியனவாகிய பற்பல நோன்புகளைக் குறிப்பிட்டு பட்டியலும் தருகிறார்

மார்கழி : பாவை நோன்பு, திருவாதிரை நோன்பு

தை : கொப்பி கொட்டுதல்

மாசி : பிறை தொழுதல்

முடிபு:

★ கொப்பி என்பது தெலுங்கு மொழிச் சொல்லாகும்.

★ சிறுமியர் கொப்பிப் பொட்டலுக்குச் சென்று வந்தவுடன் அப்பத்தா அல்லது அய்த்தை நுழைவாயிலில் நடு வீட்டுக் கோலம் போட்டு, அதன் மேல் தடுக்கு போட்டு, கொப்பி கொட்டி விட்டு வந்த சிறுமிக்கு ஆலத்தி எடுப்பார்கள் (ஆலத்தி என்பது சிறிய கிண்ணத்தில் நீர்விட்டு சுண்ணாம்பு, மஞ்சள் சேர்த்து : ஒரு வெற்றிலையைக் கிள்ளிப் போட்டு எடுக்கும் நீர் ஆலத்தியாகும்.) எனவே, இது பாரம்பரியமிக்க நிகழ்வாக இருந்துள்ளது.

★ கொப்பி கொட்டும் நாளில் செட்டிய வீட்டுச் சிறுமியர் கொப்பிப் பொட்டல் போகின்றனர். குடிவண்ணார் எனப்பட்ட குடும்ப சலவைத் தொழிலாளி வருகிறார் - கோயிலின் முன் ‘மாத்து’ விரித்து சிறுமியர் தருகின்ற கொப்பிப் பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர். ஆனால் பாட்டு இல்லை, கொப்பி இல்லை.

ஆலோசனை

கொப்பி என்பதை ஏன் வேறு வகையாக மாற்றி யோசித்து புதுமை புகுத்து முயற்சியாக பொங்கல் சமயத்தில், திருவிழாக்களில் கடவுள் பெருமை சொல்லி கொப்பி கொட்டுவதோடு, பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்து முகத்தான் சுவட்டு முயற்சி எடுக்கலாம். ஓர் உதாரணமாக இந்த வருடம் வருகின்ற பழைய/புதிய கொரோனா - டெல்டா போன்றவைகளை சமாளிக்கும் விதமான பாட்டெழுதி பயிற்சி எடுத்து கொப்பி கொட்டலாம்.

Pics : Viscom Students, Kovilur.